# கீழைத்திருக்காட்டுப்பள்ளித்

# திருப்பதிகம்

அமரர் கி. அருணாசல முதலியார்
அவர்களின் நினைவாக அன்பளிப்பு.

அளிப்பவர்:

திருமதி சியாமளா அருணாசலம்

(1982) சீர்காழி.

தருமபுர ஆதீனம்.



திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
25-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண் 105.

உ
குருபாதம்
திருச்சிற்றம்பலம்

# கீழைத்திருக்காட்டுப்பள்ளித் திருப்பதிகம்

இது
திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
உடு-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்
திருவுள்ளத்தின்படி
வெளியிடப்பெற்றது.

தருமபுர ஆதீனம்

1946

# பதிப்புரை

திருக்கயிலாயபரம்பரைத் தருமபுர ஆதீனம் உடு-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் சமய வளர்ச்சி கருதி ஆற்றி வரும் பணிகள் பலவாகும். அவைகளுள் திருப்பதிகங்கள் கொண்ட 274 சிவஸ்தலங்களிலும் ஆதீனச் சார்பில் சிறப்பாக அபிஷேக ஆராதனைகள் செய்வித்து, அந்தந்தத் தலப்பதிகங்களையும் ஆங்காங்கு முறைப்படி ஓதுவித்து, ஆராதனை முடிவில் அத்தலப்பதிகங்கள் அடங்கிய புத்தகங்களை அன்பர்கட்கு வழங்குதலும் ஒன்றாகும். ஆதலின் அவர்கள் திருவுள்ளப்பாங்கின்படியே கீழைத்திருக்காட்டுப் பள்ளித் திருப்பதிகம் என்னும் இந்நூல் ஆதீன வெளியீடாக வெளிவந்துள்ளது. அன்பர்கள் பதிகங்களைப் பாராயணஞ்செய்து ஸ்ரீ ஆரணியசுந்தரர் திருவருளால் எல்லாநலங்களும் பெற்று உய்வார்களாக.

உ

குருபாதம்

# தலக்குறிப்பு

அகனமர்ந்த அன்பினராய் அறுபகை செற்று ஐம்புலனும் அடக்கிய ஞானப் புகலுடையோர்தம் உள்ளத்தாமரையில் வீற்றிருக்கும் இறைவன், காணாத அருவினுக்கும் உருவினுக்கும் நிகழ்குறியாம் சிவலிங்கம் முதலாகிய திருமேனிகளிடத்தும் எழுந்தருளியிருந்து, பூவும் நீருங்கொண்டு தன்னை வழிபாடுசெய்யும் ஆன்மாக்கட்கு அந்தமில் இன்பத்து அழிவில்வீடாகிய பேரின்பத்தை அளித்து அருள்பாலிக்கும் தலங்கள் நம் நாட்டில் பல காணப்படுகின்றன. ஆயினும் தேவாரப்பதிகங்கள் பெற்றனவாக உள்ளன இருநூற்றெழுபத்து நான்காகும். அவைகளுள் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த திருப்பதிகங்கள்-பெற்ற தலங்கள் 110. அதனுள் ஒன்றே ஸ்ரீழைத்திருக்

காட்டுப்பள்ளி என்னும் இத்தலம். திருவை யாற்றுக்கு மேற்கில் எட்டு கல் தொலைவில் திருக்காட்டுப்பள்ளி என்னும் ஓர் தலம் விளங்குகின்றதாகலின் அது மேலைத்திருக் காட்டுப்பள்ளி என்றும், இது கீழைத்திருக் காட்டுப்பள்ளி என்றும் வழங்கப்பெறுகிறது.

இத்தலம் தஞ்சைஜில்லா சீகாழிதாலுக்கா சீகாழி ரயில்வேஸ்டேஷனில் இறங்கி மட் சாலைவழியாகத் தென்கிழக்கே சுமார் ஏழு கல்தூரஞ் சென்றால் திருவெண்காடு என் னும் தலத்தை அடையலாம். பின்னர் அங் கிருந்து மேற்கே ஒருகல் தூரஞ்சென்றால் இத்தலத்தை யடையலாம். ஊரும் ஆலய மும் மிகச்சிறியது. தலமுறை வகுத்த பெரி யார்கள் இதனைப் பன்னிரண்டாவது தல மாக வைத்துக் கணக்கிட்டிருக்கின்றார்கள். விருத்திராசுரனைக்கொன்ற பழி இந்திரனைப் பற்றி வருத்த அதுகண்டதேவர்கள் 'தம் தலை வனுக்கு இத்தகைய பழி வருத்துகின்றதே

என்செய்வது' என்று ஆலோசித்து முடிவில் இத்தலத்துக்கு வந்து பெருமானைப் பூசித்து வணங்கி அதுகாரணமாகத் தமது தலைவனுக்கு ஏற்பட்ட பழியைப்போக்கிகொண்டார்கள் என்பது வரலாறு. இறைவன் **ஆரணியசுந்தரர்.** இறைவி அகிலாண்டநாயகி. சம்பந்தர் திருப்பதிகம் ஒன்று.

# தலப்பதிகக்குறிப்பு

இத்தலத்தில் இறைவன் காதலுடன் எழுந்தருளியிருப்பர். தலம் காவிரியின் மருங்கே விளங்குகிறது. அதன் அலைகள் பூக்களையும் இரத்தினங்களையும் பொன் துகளினையும் சந்தனம் அகில் முதலியவைகளையும் கரையினிடத்து ஒதுக்குகின்றன. வாழைமரங்கள் கனிகளை யீன அவைகளிடத்தேயுள்ள தேன் வழிந்தோடுகின்றது. கயல்மீன்களும் பாய்கின்றன. நீலப்பூ நெய்தற்பூ தாமரைப்பூ செங்கழுநீர்ப்பூ ஆகியவைகளை யெல்லாம் பெண்டிர்கள் பிய்த்தெறிகின்றார்கள். அப்பெண்டிர்கள் மறுபடியும் அப்பூக்கள் நிறைந்துள்ள குளங்களில் நீராடுகின்றார்கள்.

இறைவன் பூவும் நீரும் கொண்டு பூசித்து வணங்கும் தொண்டர்களது வினையைக் கெடுத்து அருள்செய்வர்.

உ

சிவமயம்

# திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம்

## பண் – நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

செய்யரு கேபுனல் பாயவோங்கிச்
செங்கயல் பாயச் சிலமலர்த்தேன்
கையரு கேகனி வாழையீன்று
கானலெல் லாங்கமழ் காட்டுப்பள்ளிப்
பையரு கேயழல் வாயவைவாய்ப்
பாம்பணை யான்பணைத் தோளிபாகம்
மெய்யரு கேயுடை யானையுள்கி
விண்டவ ரேறுவர் மேலுலகே. க

* * * *

உ

திரைகளெல் லாமல ருஞ்சுமந்து
செழுமணி முத்தொடு பொன்வரன்றிக்
கரைகளெல் லாமணி சேர்ந்துரிஞ்சிக்
காவிரி கால்பொரு காட்டுப்பள்ளி
உரைகளெல் லாமுணர் வெய்திநல்ல
வுத்தம ராயுயர்ந் தாருலகில்
அரவமெல் லாமரை யார்த்தசெல்வர்க்
காட்செய வல்ல லறுக்கலாமே. ௮

தோலுடை யான்வண்ணப் போர்வையினான்
சுண்ண வெண்ணீறு துதைந்திலங்கு
நூலுடை யானிமை யோர்பெருமா
னுண்ணறி வால்வழி பாடுசெய்யுங்
காலுடை யான்கரி தாயகண்டன்
காதலிக் கப்படுங் காட்டுப்பள்ளி
மேலுடை யானிமை யாதமுக்கண்
மின்னிடை யாளொடும் வேண்டினானே. ௯

சலசல சந்தகி லோடுமுந்திச்
சந்தன மேகரை சார்த்தியெங்கும்
பலபல வாய்த்தலை யார்த்துமண்டிப்
பாய்ந்திழி காவிரிப் பாங்கரின்வாய்க்
கலகல நின்றதி ருங்கழலான்
காதலிக் கப்படுங் காட்டுப்பள்ளிச்
சொலவல தொண்டர்க ளேத்தநின்ற
சூலம்வல் லான்கழல் சொல்லுவோமே. ௫

தளையவிழ் தண்ணிற நீலநெய்த
றாமரை செங்கழு நீருமெல்லாங்
களையவி ழுங்குழ லார்கடியக்
காதலிக் கப்படுங் காட்டுப்பள்ளித்
துளைபயி லுங்குழ லியாழ்முரலத்
துண்ணிய வின்னிசை யாற்றுதைந்த
அளைபயில் பாம்பரை யார்த்தசெல்வர்க்
காட்செய வல்ல லறுக்கலாமே. ௬

முடிகையி னாற்றொடு மோட்டுழவர்
முன்கைத் தருக்கைக் கரும்பின்கட்டிக்
கடிகையி னாலெறி காட்டுப்பள்ளி
காதல்செய் தான்கரி தாயகண்டன்
பொடியணி மேனியி னானையுள்கிப்
போதொடு நீர்சுமந் தேத்திமுன்னின்
றடிகையி னாற்றொழ வல்லதொண்ட
ரருவினை யைத்துரந் தாட்செய்வாரே. எ

பிறையுடை யான்பெரி யோர்கள்பெம்மான்
பெய்கழ னாடொறும் பேணியேத்த
மறையுடை யான்மழு வாளுடையான்
வார்தரு மால்கட னஞ்சமுண்ட
கறையுடை யான்கன லாடுகண்ணாற்
காமனைக் காய்ந்தவன் காட்டுப்பள்ளிக்
குறையுடை யான்குறட் பூதச்செல்வன்
குரைகழ லேகைகள் கூப்பினோமே. அ

செற்றவர் தம்மர ணம்மவற்றைச்
செவ்வழல் வாயெரி யூட்டிநின்றுங்
கற்றவர் தாந்தொழு தேத்தநின்றான்
காதலிக் கப்படுங் காட்டுப்பள்ளி
உற்றவர் தாமுணர் வெய்திநல்ல
வும்பருள் ளார்தொழு தேத்தநின்ற
பெற்றம ரும்பெரு மானையல்லாற்
பேசுவது மற்றொர் பேச்சிலோமே. ௯

ஒண்டுவ ரார்துகி லாடைமெய்போர்த்
துச்சிகொ ளாமையுண் டேயுரைக்குங்
குண்டர்க ளோடரைக் கூறையில்லார்
கூறுவ தாங்குண மல்லகண்டீர்
அண்டம றையவன் மாலுங்காணா
வாதியி னானுறை காட்டுப்பள்ளி
வண்டம ரும்மலர்க் கொன்றைமாலை
வார்சடை யான்கழல் வாழ்த்துவோமே. ௧௦

பொன்னிய ருமரை நீலநெய்தல்
போதுக ளாற்பொலி வெய்துபொய்கைக்
கன்னியர் தாங்குடை காட்டுப்பள்ளிக்
காதல னைக்கடற் காழியர்கோன்
றுன்னிய வின்னிசை யாற்றுதைந்து
சொல்லிய ஞானசம் பந்தனல்ல
தன்னிசை யாற்சொன்ன மாலைபத்துந்
தாங்கவல் லார்புகழ் தாங்குவாரே. கக

திருச்சிற்றம்பலம்.



ஞானசம்பந்தம் பிரஸ், தருமபுரம், C. 500. 7—4—46.